குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**எஸ்.டி.சி.எண். 489/2024**

வழக்கு சாட்சி ம.சா.1

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09–ம் நாள் மனுதாரர் தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| பெயர் | Balasubramanian | தொழில் | |
|---|---|---|---|
| த/பெ | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**நாள் 09.10.2025**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவின் குற்றமுறையீட்டாளர் ஆவேன். என்னிடம் காட்டப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு சான்றவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 16.09.2023 | எதிரி எனக்கு கொடுத்த காசோலை எண். 000003 | ம.சா.ஆ.1 | அசல் |
| 2 | 20.09.2023 | ரிட்டன மெமோ | ம.சா.ஆ.2 | அசல் |
| 3 | 25.09.2023 | சட்ட அறிவிப்பு | ம.சா.ஆ.3 | அலுவலக நகல் |
| 4 | 26.09.2023 | அஞ்சல் ஒப்புகை அட்டை | ம.சா.ஆ.4 | அசல் |

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன வேலை செய்கிறேன் என்றால் ஆட்டோ ஓட்டி கொண்டிருக்கிறேன். சொந்த ஆட்டோவா என்றால் ஒரு மாதத்திற்கு முன்பு விற்றுவிட்டேன். ஆட்டோ எனது பேரில் ஓட்டி வந்தததற்கான ஆவணம் என் கைவசம் உள்ளது என்றால் ஆம். ஆட்டோ ஓட்டி வந்ததை தவிர வேறு எந்த தொழிலும் நான் செய்யவில்லை என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டி வந்த காலத்தில் சவாரி கிடைத்தால் தான் எனக்கு அதன் மூலம் வருமானம் வரும் என்று சொன்னால் சரிதான். மாதம் சுமார் எவ்வளவு வருமானம் வரும் என்றால் ரூ.15,000/–ற்குள் வரும். ஆட்டோ செலவு, வீட்டு செலவு எல்லாம் போக எவ்வளவு மீதம் இருக்கும் என்றால் ரூ.8000/– இருக்கும். நான் ஓட்டி வந்த ஆட்டோ Due போட்டு வாங்கியதா என்றால் இல்லை. 2$^{nd}$ Hand ஆக தான் வாங்கினேன். எனது வருமானத்தை நிரூபிக்க எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரிதான். வருமான வரி செலுத்தும் நபரா என்றால் ஆமாம். எத்தனை வருடமாக செலுத்தி வருகிறேன் என்றால் கடந்த 3 வருடமாக செலுத்தி வருகிறேன். எனது வருமான வரி

கணக்கை பார்த்தால் பணம் கொடுத்தல் சம்பந்தமாக அனைத்து விவரங்களும் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். எனது வருமான வரி கணக்கை ஒரு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் எனது வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேன் என்றால் அது எனது ஆடிட்டருக்கு தான் தெரியும். எனக்கு தெரியாது. எதிரி எனக்கு தொழில் ரீதியாகவோ, பள்ளி, கல்லூரி நண்பரோ அல்லது உறவினரோ அல்ல என்றால் சரிதான். எதிரியின் குடும்ப உறுப்பினர் பற்றியோ, அவர்கள் பெயர் விவரம் பற்றியோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரில் எதிரி எந்த தேதி கடன் வேண்டும் என்று கேட்டார் என்ற விவரம் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கடன் கொடுத்த தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு என்னிடம் அவர் கேட்டார். எதிரி என்னிடம் கடன் கேட்ட சமயத்தில், என் கைவசம் பணம் இல்லாத காரணத்தினால் தான் என்னால் அந்த சமயத்தில் கொடுக்க இயலவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் எனது கையில் பகுதி பணம் இருந்தது. மீதி தொகையை வெளியிலிருந்து கைமாற்றாக வாங்கி கொடுத்தேன். பகுதி பணம் எவ்வளவு இருந்தது என்றால் சுமார் ரூ.1.40 லட்சம் கையில் இருந்தது. மீதி ரூ.60,000/– வெளியில் இருந்து கைம்மாற்றாக வாங்கி கொடுத்தேன். நான் கைம்மாற்றாக தான் வாங்கி கொடுத்தேன். எனக்கு எத்தனை வங்கியில் கணக்கு உள்ளது என்றால் 3 வங்கியில் கணக்கு உள்ளது. பள்ளிபாளையம் யூனியன் வங்கி, பேங்க் ஆப் பரோடா பள்ளிபாளைம் கிளை, ஐ.டி.பி.ஐ வங்கி, பள்ளிபாளையம் கிளை ஆகிய வங்கிகளில் கணக்கு உள்ளது. எனது புகாரில் எந்த இடத்திலும் நான் எதிரிக்கு கடன் கொடுத்தாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொல்லியுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் எனது புகார் மனுவில், எதிரிக்கு நான் கொடுத்ததாக எங்கும் கண்டு எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான். (சாட்சி படித்து பார்த்து கூறினார்). எனது வழக்கு ஆவணங்களில் எங்கும் எந்த விதத்தில் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ரொக்கமாக கொடுத்தேன். எந்த வங்கி கணக்கில் இருந்து ரூ.1.40 லட்சம் தொகை எடுத்தேன் என்றால் எனது கைவசம் இருந்தது. அதை தான் கொடுத்தேன். எனது வங்கியில் வைப்பீடு செய்யும் பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. எனது வருமான வரி கணக்கை பார்த்தால் எதிரிக்கு கடன் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தற்போது வரை எதிரிக்கு கடன் கொடுத்த விபரத்தை எனது வருமான வரி கணக்கில் காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எங்க வைத்து யார் முன்னிலையில் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்ற விபரத்தை எனது வழக்கு ஆவணங்களில் எங்கும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால், எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். எனது வீட்டில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்றால் நான் மட்டும் தான் எனது வீட்டில் வசித்து வருகிறேன். வேறு யாரும் வசிக்கவில்லை. என்னுடைய Smart Card

(குடும்ப அட்டை) நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். எனது வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். காசோலையில் உள்ள விவரங்கள் யார் பூர்த்தி செய்த விவரம் எனது வழக்கு ஆவணங்களில் எங்கும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் எதிரி தான் பூர்த்தி செய்து, கையொப்பம் செய்து என்னிடம் கொடுத்தார். எந்த பேனா மையினால் எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. காசோலையில் உள்ள அனைத்து விவரங்களும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு கையொப்பம் மட்டும் தமிழில் போடப்பட்டது. எல்லா விவரங்களும் ஒரே பேனா மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் நான் அதை கவனிக்கவில்லை. எதிரியின் Account Number என்ன என்றால் இந்த நீதிமன்றத்தில் எத்தனை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 4 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். எவ்வளவு தொகைக்கு மேற்படி வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1) ரூ.6 லட்சத்திற்கும், 2)ரூ.1.10 லட்சத்திற்கும், 3) ரூ.1.40 லட்சத்திற்கும், 4) ரூ.2 லட்சத்திற்கும் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன அனைத்து கடன்களையும் எனது வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் எனது ஆடிட்டருக்கு தான் தெரியும். எனது வரவு செலவு அனைத்து விவரங்களையும் நான் சொல்லி தான் ஆடிட்டர் தயார் செய்வார் என்றால் சரிதான். மேற்படி கடன் கொடுத்த சம்பந்தமாக எனது ஆடிட்டரிடம் சொல்லி வருமான வரி கணக்கில் காண்பிக்க சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-ற்கு குறைவாக வருமானம் வருவதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், ரூ.10 லட்சத்திற்கு மேல் மற்ற நபர்களுக்கு கடனாக கொடுத்தேன் என்று சொல்வது நம்பும்படியாக இல்லை என்று சொன்னால் தவறு. நான் 2021-2022 வாக்கில் காடு விற்றேன். 2023 அல்லது 2024ல் ஒரு ஏக்கர் நிலம் அடமானம் வைத்துள்ளேன். அதில் தொகை வந்தது. ஒரு ஏக்கர் நிலம் அடமானம் மற்றும் நிலம் விற்றது சம்பந்தமான ஆவணத்தின் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். விற்றது சம்பந்தமான ஆவணங்களை எனது வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேன். அடமான வைத்தது சம்பந்தமாக காண்பித்துள்ளேனா என்பதை பற்றி எனது ஆடிட்டருக்கு தான் தெரியும். 2021-2022 கால கட்டத்தில் எனக்கு சொந்தமான சொத்தை விற்பனை செய்த நான், அதே கால கட்டத்தில் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. விற்ற தொகையை தான் கடனாக கொடுத்தேன். நான் கொடுத்த கடனுக்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலையை தவிர வேறு எந்த ஆவணங்களும் கடனுக்கு ஆதரவாக எதிரியிடமிருந்து பெறவில்லை என்று சொன்னால் சரிதான். இதற்கு முன்னால் எதிரிக்கும் எனக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இல்லை என்று சொன்னால் சரிதான். இதற்கு முன்பு அவருக்கு பணம் ஏதும் கொடுக்கவில்லை. நான் வட்டி தொழில் எதுவும் செய்யவில்லை

என்றால் சரிதான். வட்டிக்கு எதிரிக்கு பணம் கொடுத்தேனா என்றால் ஆமாம். வட்டியும் அசலும் சேர்த்து தருவதாக சொன்னார். 3 மாதம் வட்டி செலுத்தினார். அதன் பின்னர் அசலுடன் சேர்த்து தருவதாக சொன்னார். அசலும் வட்டியும் சேர்த்து தான் இந்த காசோலை தொகையா என்றால் இல்லை. 3 மாதம் வட்டி செலுத்திய விவரத்தை எனது வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பிக்கவில்லை.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

**Sd/– Tmt.A.K.Padmapriya,**
**Judicial Magistrate,**
**Kumarapalayam.**